விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 068 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 13 சனிக்கிழமை (25.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## வடக்கு மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு சமமாக வாழும் சகாப்தம் உருவாக்கப்படும்

### யாழில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(யாழ்ப்பாணம்)
வடக்கு மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு நாட்டின் சகல பிரஜைகளும் சமமாக வாழும் சகாப்தம் உருவாக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கிலும் தெற்கிலும் பாரிய அபிவிருத்தி சகாப்தத்தை உரு 11

## 13வது திருத்தம் அவசியமற்றது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கண்டி)
**13ஆவது திருத்தச் சட்டத்தை தற்போது அமுல்படுத்துவது அவசியமற்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மக்களின் உரிமைகளை நிலைநாட்ட 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட 11

## மார்ச் 9இல் தேர்தல் இல்லை

### புதிய திகதி மார்ச் 3இல் அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஏற்கெனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடத்த முடியாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற கூட்டத் 11

## கனடா தம்பதிகள் மீது அனலைதீவில் வாள்வெட்டு

### பெருமளவு பணம், பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
அனலைதீவில் தங்கியிருந்த கனடா பிரஜைகளின் இல்லத்திற்குள் நுழைந்து பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதோடு கனடாப் பிரஜைகள் மீதும் வாள்வெட்டும் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் 11

## யாழ் ராணி மோதியதில் முதியவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
யாழ் ராணி புகையிரத்துடன் மோதுண்டு முதியவர் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்.நோக்கிப் பயணித்த புகையிரதம் பரந்தன் 1/4 ஏக்கர் திட்டம் உமையாள்புரம் பகுதியில் சென்றபோது குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது. 11

## வடக்கின் விவசாயத்துறையை விடுதலைப் புலிகளே அழித்தனர்

### அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)
அரசு மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கிவரும் இவ்வேளையில், இனவாதத்துடன் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளே அதற்கு ஒத்துழைப்பதில்லையென நீதி 11

### நிலநடுக்கம் தொடர்பில்

## இலங்கைக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
இந்தியாவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டால் அது கொழும்பு நகரைப் பாதிக்கும் வாய்ப்புகள் அதிகம் என புவியியல் துறையின் மூத்த பேராசிரியர் 11

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## தேர்தலை சீர்குலைப்பதை நிறுத்த வேண்டும் - சுமந்திரன்

(கொழும்பு)
"சட்டரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் தேர்தல் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சீர்குலைக்கும் வகையில் செயற்படுவதை ஜனாதிபதியும், அரசாங்கமும் நிறுத்த வேண்டும்" என 11

## நிதி அமைச்சுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)
தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறு நிதி அமைச்சிற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் தினங்களில் இதுதொடர்பான வழக்கு தாக்கல்செய்யப்படும் என அக்கட்சியின் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரிய பரீட்சைக்கு 85,072 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான 7 ஆவது கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சைக்காக 85,072 பேர் விண்ணப்பித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

தென் கொரியாவின் உற்பத்தி மற்றும் கடற்றொழில் துறைகளுக்காக குறித்த கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சை நடத்தப்படுகிறது.

கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சைக்காக அதிகளவானோர் விண்ணப்பித்துள்ள சந்தர்ப்பம் இதுவென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சைக்காக 31,378 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர்.

இதனிடையே இம்முறை கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகளை வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் துறையில் காணப்படும் வேலைவாய்ப்புகளுக்கான கொரிய மொழி பரீட்சை மார்ச் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், கடற்றொழில் துறை வேலைவாய்ப்பிற்கான பரீட்சை செப்டம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த பரீட்சைகள் பன்னிப்பிட்டிய கொரிய கணினி பரீட்சை மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)


## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான Student Visa வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (C-6045)

**076 250 0098 / 021 222 1265**


## யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம் :- தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை மண்டபம்

காலம்:- 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- பிற்பகல் 2.30 மணி

அங்கத்துவ பழைய மாணவர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகை தந்து பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர் – பழையமாணவர் சங்கம் (C-6049)

# தேர்தலை நடத்தாவிடின் போராட்டம் நடத்துவோம்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலை நடத்தாவிடின் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ந்து போராடுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும்.

தேர்தலை ஒத்திவைக்க சாக்குப்போக்குக் காரணங்களைக் கூறுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

நாட்டின் உண்மை நிலைமை மக்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அவர் தலைமையிலான அரசாங்கமோ மக்களுக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# சூதாட்டம் 11 பேர் கைது

கொழும்பு - பிலியந்தல, தெல்தர பகுதியில் சொகுசு வீடொன்றில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 4 பெண்கள் உட்பட 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சூதாட்டம் நடத்திய இடத்திலிருந்து 73.940 ரூபாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களில் வீட்டு உரிமையாளரான பெண்ணும், அவரது உறவுமுறை மகள் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், மகளுமே கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# பாலியல் தொழில் 5 பெண்கள் கைது

(கொழும்பு)

காலி வீதி - கொள்ளுப்பிட்டியில் தசைபிடிப்பு நிலையம் என்ற போர்வையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் பெண்கள் கைது செய்யபட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது 5 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு கோட்டை நீதி மன்றில் முற்படுத்திய நிலையில் 3 பேரை தலா ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், சம்பவம் குறித்து இவர்களிடம் விசாரணை நடாத்தி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், தசைபிடிப்பு நிலைய முகாமையாளரான பெண்ணையும், பாலியல் தொழிலில் ஈடுபட்ட மற்றுமொரு பெண்ணையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

# மாணவி காயம்

பாதுகாப்பற்றரயில் கடவையில் சைக்கிளில் பாதையைக் கடக்க முற்பட்ட மாணவியை ரயில் பாதை திருத்தும் வாகனம் மோதியதில் மாணவி காயமடைந்து, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் வவுனியா - தாண்டிக்குளத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. (ம-7)


## யோகா, தியானப் பயிற்சி


திருமூலர் யோகாலயம் ACADEMY Thirumoolar Yogalayam

நல்லூர் தேரடி முன்பாக உள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய அஷ்டாங்க யோகா பயிற்சி வகுப்புகள் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நான்கு மாதங்கள் கொண்ட பயிற்சி நெறியானது சித்தர்கள், ரிஷிகள் வழிகாட்டிய உடல், உள, உயிர் ஆரோக்கியத்திற்கும், குணப்படுத்தலுக்குமானது. அனைவரும் கலந்துகொள்ளலாம்.

பயிற்சியாளர் ப.அச்சுதராஜா உலக சமாதான ஆலய மெய்ஞான ஆசிரியரும், திருமூலர் யோகாலயஸ்தாபகரும், ஆர்வலர்கள் **077 760 7026** என்ற தொலைபேசி எண்ணிற்கு பதிவுசெய்யவும். (14719)


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 – 01 – 1947



மறைவு 23 – 02 – 2023

### திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி

பிள்ளைக்கலட்டி உடுப்பிட்டி வடக்கு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 23.02.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரியபுத்திரர் இலட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாவின் அன்புக் கணவரும் பிரசன்னா, பிரதீபன், பிரதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புத் தம்பியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சண்முகரத்தினம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் தேவிகா, ரமித்தா, ராசகுமார், நிர்மலா, ஸ்ரீரஞ்சனி, மோகன், பிரபாகரன், ராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரியா, ரீனா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிள்ளைக்கலட்டி இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

077 521 2692 (மனைவி)

077 841 3568 (மைத்துனர்)

076 475 5693 (மகள்) (C-6050)

## துயர் பகிர்கின்றோம்



பாலு அண்ணை என்று எம்மால் அழைக்கப்பட்ட அமரர் ச.கிருஷ்ணசாமி அவர்களின் மாமியும், எங்களோடு சபரிமலை யாத்திரை செய்த கணாஸ்வாமி மற்றும் மயூரன், பிருந்தா, தாட்ஷா ஆகியோரின் அம்மம்மா

திருமதி **சின்னப்பிள்ளை கனகசபை**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!
அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரம்புலோவானைப் பணிகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 26.0[illegible] மறைவு 24.02.2023

தங்க முகுந்தன் குடும்பம் - மூளாய், சுழிபுரம். 077 727 9238 (C-6[illegible])

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ❖ இலங்கையின் அவசரகால நிலைகள் ❖ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில்

# 27 ஆம் திகதி ஐ.நாவில் மீளாய்வு

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளின் நிலைமைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.**

மனித உரிமைகள் குழுவின் 137 ஆவது அமர்வு நாளை மறுதினம் 27 ஆம் திகதி முதல் மார்ச் 24 வரை நடைபெறும்.

இதில் இலங்கை, பெரு, பனாமா, எகிப்து, சாம்பியா மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளின் அறிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்படவுள்ளன.

173 உறுப்பினர்கள் குழு வில் அடங்கும் இந்த 6 நாடுகளினதும் மதிப்பாய்வை, 18 சர்வதேச சுயாதீன நிபுணர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கமைய, மனித உரிமை மீறல்கள், பாலின அடிப்படையிலான வன்முறைகள், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் இலங்கையில் அவசரகால நிலைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், நீதி மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் அமர்வில் பொது உரையாடல்கள் மூலம் விவாதிக்கப்படவுள்ளன. (நி)

## விடைத்தாள் திருத்துநர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)



க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்துநர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போதைக்கு பரீட்சைத்தாள் திருத்துநர்களுக்கான கொடுப்பனவை அதிகரித்து வழங்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குள் அதற்கான சுற்று நிருபம் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்களை திருத்தும் பணிக்கு 19000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

எனினும் 15000 பேரே அதற்காக விண்ணப்பித்திருக்கும் நிலையில் அவர்களைக் கொண்டு வினாத்தாள்களை திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டால் காலதாமதம் ஏற்படக்கூடும் என்று கல்வி அமைச்சு கருதுகின்றது.

ஏற்கனவே உயர்தரப் பரீட்சையும் தாமதித்து நடைபெற்றுள்ள நிலையில், பரீட்சைத் தாள்களை திருத்தும் பணிகளை தாமதப்படுத்த இடமளிக்கக்கூடாது என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

## தொழிற்சங்க நிபுணர்களின் ஒன்றியத்தை இன்று சந்திக்கின்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

புதிய வருமான வரிச் சட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தொழிற்சங்க நிபுணர்களின் ஒன்றியத்தை இன்று சனிக்கிழமை சந்திக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

தாங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி இதற்கு இணக்கம் தெரிவித்ததாகவும் இன்று இடம்பெறவுள்ள கலந்துரையாடல் வெற்றியளிக்காவிடின் எதிர்வரும் முதலாம் திகதிக்கு பின்னர் நாட்டிற்கு மிகவும் தீர்மானம் மிக்க காலமாக மாறுக்கூடும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் மருத்துவர் சமில விஜேசிங்க தெரிவித்துள்ளார். (நி)

## தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியான தடைகள் எதுவுமில்லை

### பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

தேர்தலை நடத்துவதற்கான சட்டரீதியான தடைகள் எதுவுமில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைக்க கோரும் மனுவை உயர்நீதிமன்றம் மே 11 ஆம் திகதி வரை பிற்போட்டுள்ளதே தவிர தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியான தடை எதுவுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் யதார்த்தத்தில் அரசாங்கம் நிதியை சுற்றுநிருபங்கள் மூலம் தடைசெய்கின்றது என தெரிவித்துள்ள ரோகண ஹெட்டியாராச்சி எங்கள் பாராளுமன்ற தலைவர்களால் மக்களின் வாக்குரிமை கேள்விக்குட்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பான விடயங்களிற்காக ஏற்கனவே 500 மில்லியனிற்கு மேல் செலவிட்டுள்ளனர்.

இது பொதுமக்களின் பணம் என குறிப்பிட்டுள்ள பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் தேர்தல் நடைபெறாவிட்டால் இந்த பணத்தை வீணடித்தமைக்கான பொறுப்பை அரசியல் தலைமையும் அரசாங்க அதிகாரிகளும் ஏற்பார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

## உலக வங்கியின் பிரதித் தலைவர் இலங்கைக்கு இன்று விஜயம்

(கொழும்பு)

உலக வங்கியின் பிரதித் தலைவர் இன்று சனிக்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கிட்டும் வரை இலங்கையின் சுகாதார சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு உலக வங்கியின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறவுள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் இவரின் விஜயம் அமைந்துள்ளது. (நி)

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க 56 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)



விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு தேவையான நிவாரணங்களை இந்த வருடம் வழங்குவதற்காக அரசாங்கம் 56 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால், பயிர்களில் போதிய இலாபம் கிடைப்பதில்லை என விவசாயிகளிடம் இருந்து கிடைத்துள்ள குறிப்பை கருத்தில் கொண்டு, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, விவசாய அமைச்சர் தெரிவித்தார். (நி)

### ஊட்டச்சத்து குறைவான

## 3.4 மில்லியன் மக்களுக்கு உதவ உலக உணவுத்திட்டம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், உணவுப் பாதுகாப்பின்மை தொடர்ந்தும் கரிசனை நிலையில் உள்ளது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத்திட்டம்நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


முன்னதாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பரில் மேற்கொள்ளப்பட்ட வீட்டு உணவுப் பாதுகாப்பு ஆய்வின்படி 33 சதவீத குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தன.

இந்தநிலையில் பொது உணவு விநியோகம், பாடசாலை உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு மூலம் 3.4 மில்லியன் மக்களுக்கு உதவத் திட்டமிட்டுள்ளதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொன் அணிகளின் போர்' நேற்று ஆரம்பமாகியது





பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர் நேற்று யாழ்ப்பாணக் கல்லூரியின் மைதானத்தில் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் அணித் தலைவராக ஜங்கரன் நிகர்லன் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் அணித் தலைவராக சிவராசா கீர்த்தனன் தலைமை தாங்கினர்.

(4-6-33-104)

# டெல்லி-ஹைதராபாத் அணிகளின் புதிய தலைவர்கள் அறிவிப்பு

16 ஆவது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடருக்கான முன்னேற்பாடுகளை, ஒவ்வொரு அணி நிர்வாகமும் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், டெல்லி கெபிடல்ஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகளின் புதிய தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, டெல்லி கெபிடல்ஸ் அணியின் தலைவராக அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் எஞ்சிய இரு போட்டிகளில், உபாதை காரணமாக விலகியுள்ள வோர்னர், டெஸ்ட் தொடருக்கு அடுத்ததாக நடைபெறும் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளார்.

இந்த நிலையில், டெல்லி அணியின் முன்னாள் தலைவர் ரிஷப் பந்துக்கு பதிலாக, வோர்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல, சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் தலைவராக தென்னாபிரிக்காவின் ஹெய்டன் மார்க்ரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபகாலமாக மூன்று வகை கிரிக்கெட்டிலும் சிறப்பாக விளையாடி வரும் ஹெய்டன் மார்க்ரம், சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற எஸ்.ஏ.20 தொடரில், மார்க்ரம் தலைமையிலான 'சன்ரைசஸ் ஈஸ்டன் கேப் அணி முதல் சம்பியன் பட்டத்தை வென்றது. சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் மற்றொரு அணியான, சன்ரைசஸ் ஈஸ்டன் கேப் அணி சம்பியன் பட்டம் வென்றதன் பின்னணியில், மார்க்ரமுக்கு இந்த தலைமை பதவி வழங்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி ஆரம்பமாகும் 16 ஆவது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடர், மே 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2771

### கரன்

ஜோசியர்: நீ காதலிக்கிற பையனே உனக்கு கணவனாய் அமைவான்



இளம்பெண்: குறிப்பா யாருன்னு சொல்லாம இப்படி பொதுவா சொன்ன எப்படி!!!

### கலை

ஒரு குருவி பறந்து வரும் போது ஒரு கார் மேல மோதி மயங்கி விழுந்திருச்சு...
அந்த கார் டிரைவர் குருவிய ஒரு கூண்டுக்குள் வச்சு தண்ணீர் கொடுத்தார்..
மயக்கம் தெளிஞ்ச அந்த குருவி என்ன சொன்னது தெரியுமா?



அச்சச்சோ நான் ஜெயில்ல இருக்கேனா?
அப்படின்னா கார் ரைவர் செத்துட்டாரா???

### தனுஷ்



இதயம் நில்லாமல் துடிக்காது.
இன்பம், துன்பம் இல்லாமல் வாழ்க்கை இனிக்காது.
இன்பமோ, துன்பமோ எது வந்தாலும் எதிர்கொள் துவழாதே,
சமநிலையில் நாம் இருந்தால் வாழ்க்கை சுகம் தான்...!

### வதனி



ஓடி ஓடி உதவி செய்யும் வரை தான்
அனைவராலும் மதிக்கப்படுவாயய்
ஒருமுறை மறுத்துப் பார்
அடுத்த நொடியே நீ மறக்கப்படுவாய்

### தாரணி



அடிச்சது அம்மாதான்னு தெரியும்.
ஆனாலும் அழுதுகிட்டே அம்மா கிட்ட தான் ஓடும் குழந்தைகள்

### வைஷ்ணவி



சோறு பொங்கும் போது தீயைக் குறைக்கனும்
கோபம் வரும் போது வாயை குறைக்கனும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய-உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(ஜெனீவா)

ரஷ்யா தனது படைகளை உக்ரைனில் இருந்து விலக்கிக் கொள்ளவும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வரவும் கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ரஷ்யா தனது படையெடுப்பைத் தொடங்கி ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில், ஏராளமான நாடுகளின் கண்டிப்பு மற்றும் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்ற அழைப்புக்கு மத்தியில் இந்தத் தகவல் வந்துள்ளது.

இந்தப் பிரேரணையை 141 நாடுகள் ஆதரித்தன. இலங்கை உட்பட 32 நாடுகள் வாக்களிக்கவில்லை மற்றும் ரஷ்யா உட்பட ஏழு நாடுகள் எதிராக வாக்களித்தன. (நி)

## மகப்பேற்று மரண விகிதம் அதிகரிப்பு

### 2 நிமிடங்களுக்கு ஒரு பெண் உயிரிழப்பதாக ஐ.நா தெரிவிப்பு

(ஜெனிவா)

உலகில் ஒவ்வொரு 2 நிமிடங்களிலும் பிரசவ மற்றும் கர்ப்ப கால கோளாறுகளால் பெண்ணொருவர் உயிரிழக்கிறார் என ஐ.நா தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 800 பெண்கள் பிரசவம் மற்றும் கர்ப்ப கால கோளாறுகளால் இறந்துள்ளனர். இது 2 நிமிடங்களுக்கு ஒரு மரணம் என்ற விகித்தில் உள்ளதாக ஐ.நா தெரிவிக்கிறது.

மேற்படி காலப்பகுதியில் பெலிஸில் மகப்பேற்று மரணங்களில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வெனிசூவேலாவில் அதிக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2016 முதல் 2020 ஆம் ஆண்டுல் ஐ.நாவின் 8 வலயங்களில், இரு வலயங்களில் மாத்திரமே மகப்பேற்று மரணவீதங்கள் குறைவடைந்துள்ளன. அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து வலயத்தில் 35 சதவீதத்தாலும் மற்றும் மத்திய, தெற்காசிய வலயத்தில் 16 சதவீதத்தாலும் இது குறைவடைந்தது.

இக்காலப்பகுதியில் ஐரோப்பா-வட அமெரிக்காவில் 17 சதவீதத்தால் மகப்பேற்று மரண வீதம் அதிகரித்துள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என ஐ.நா தெரிவித்துள்ளது. (நி)

## இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

(இந்தோனேசியா)

துருக்கி - சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் அடுத் தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளது.

அந்தவகையில், இந்தோனேசியாவில் மீண்டும் நில அதிர்வொன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்தோனேசியாவில் 6.3 ரிக்டர் அளவில், 97 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. (நி)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.

**மதுரைமீனாட்சி பரராசசிங்கம் (மீனா)**

ஆண்டு ஒன்று ஆகியே சென்றதம்மா
ஆனாலும் உம் நினைவு அகலவே இல்லையம்மா
வாழ்ந்த நாளில் எமை வாஞ்சையுடன் சீராட்டி
வாழ்க்கை கல்விதனை வளமாகக் கற்றுத் தந்தீர்
ஆண்டவனும் உம்மை விரும்பியோ அழைத்தானோ
மீளாத்துயரில் தவிக்கின்றோம் துடிக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (25.02.2023) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 22.11.1951 உதிர்வு 08.03.2022

(14698)

111/4, நடராசா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

அமரர். திருமதி

**நந்தகுமாரி சிவபாலன்**



அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் இன்றைய தினம் 25.02.2023 சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 26.02.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தோற்றம் : 11.01.1953
மறைவு : 27.01.2023

குறிப்பு:-இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(14691)

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

077 670 7558

தகவல்: குடும்பத்தினர்.


# இராசிபலன்

25.02.2023
மாசி 13, சனிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 5.48 மணிவரை

அச்சுவினி முற்பகல் 8.40 மணிவரை
சுபநேரம் 3.29-4.59 மணிவரை
இராகுகாலம் 9.29-10.59 மணிவரை

சந்திராஷ்டமம் - அத்தம்
சஷ்டி விரதம்

வளவன்



**மேஷம்**

போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**ரிஷபம்**

ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.



**மிதுனம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.



**கடகம்**

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**சிம்மம்**

தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலின் முன்னேற்றத்துக்காக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.



**கன்னி**

புதிய முயற்சிகளை தாமதித்து செய்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.



**துலாம்**

பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



**விருச்சிகம்**

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு.



**தனுசு**

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.



**மகரம்**

குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.



**கும்பம்**

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



**மீனம்**

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உறவினர் நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

பொறாமையால் பிறரின் வளர்ச்சியைத் தவறாகப் பேசக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச லயன்ஸ் கழகத்தினரால்

# தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு ரூ.2 கோடி பெறுமதியான மருத்துவ உதவிகள்




(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை பிரிவிற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒரு கோடியே 91 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரண பொருட்களுடன் ஒரு தொகுதி மருந்துகளும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் லங்கா லயன்ஸ் பவுண்டேசனால் வழங்கி வைக்கப்பட்டது.

புற்றுநோயாளர்களது மருத்துவத் தேவைகளை முன்னிலைப்படுத்தி, விரைவான பாதுகாப்பான, மருத்துவ சேவைகளை வழங்குவதற்காகவும் சிகிச்சை விடுதிகளுக்கான ஒட்சிசன் தேவைகளை மேம்படுத்துவதற்காகவும் லயன்ஸ் கழகத்தினரால் இந்தப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை சார்பில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் எம்.எம். றெமான்ஸ், புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மருத்துவ நிபுணர் கிருஷாந்தி இராஜசூரியர் ஆகியோர் இந்த உபகரணங்களைப் பொறுப் பேற்றுக் கொண்டனர்.

இவ்வாறான மருத்துவ பொதுத் தேவைகளை முன்னிலைப்படுத்தி, தேவைப்படுகின்ற உதவிகளை நாடுபூராகவும் லயன்ஸ் கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# சமுர்த்தி உத்தியோகத்தர் போன்று பாசாங்கு செய்து நிதி மோசடி

## மட்டுவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியில் உள்ள கிராமமொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சமுர்த்தி உத்தியோகத்தர் போன்று பாசாங்கு செய்த நபர் இரண்டு வீடுகளில் நிதி மோசடியில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் கிராமத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்கு சென்ற நபரொருவர் கிராமத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் என தன்னை அறிமுகப்படுத்தி புதிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஒரே தடவையில் இருபதாயிரத்தை செலுத்தி மாதாந்தம் ஐயாயிரம் என்ற உதவித் தொகையை தொடர்ச்சியாக பெற முடியும் என ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனை நம்பி பெண்ணொருவர் 20 ஆயிரம் ரூபாவையும் மற்றொரு பெண் 15 ஆயிரம் ரூபாவையும் குறித்த நபரிடம் கொடுத்துள்ளனர்.

அதன் பின்னர் சந்தேகமடைந்து சமுர்த்தி உத்தியோகத்தரை தொடர்பு கொண்ட போதே தாம் ஏமாற்றப்பட்டதனை அறிந்து கொண்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# அன்புராசா அடிகளாரின் மூன்று நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காலிமுகத்திடல் "அரகலய" போராட்ட நாட்களில், ஆரியசிங்க என்ற சிங்கள நபருக்கு செ.அன்பு ராசா அடிகளாரால் எழுதப்பட்ட, 30 மடல்களின் தொகுப்பு நூலான "அன்புள்ள ஆரிய சிங்க" தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் தனித்தனி நூல்களாக நாளை மறுதினம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இல. 286, பிரதான வீதி.யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் நல்லை ஆதினக் குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம், யாழ். அமலமரித்தியாகிகளின் குருமுதல்வர் அருட்திரு.ஜெயந்தன் பச்சேக், யாழ்.போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி நளாயினி ஜெயதீசன், கோப்பாய் "ஞான வழி" இயக்குநர் அருட்கலாநிதி சா.ம. செல்வரட்ணம், கவிஞரும், சமூக செயற்பாட்டாளருமான சி.கருணாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (4-6)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல், சுண்ணாம்புக்கல் என்பன எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பிராந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் மணல், சுண்ணாம் புக்கலினை பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும். மற்றும் கொவிட்-19 சூழ்நிலை தொடர்பாக சுகாதார அமைச்சினால் விடுவிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாக செலுத்தி ஏலப்பொருளினை அப் புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# யாழ்.பல்கலையில் ஓவியக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்னும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை ஆரம்பமாகியது.

இந்த ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து "இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்" என்னும் தலைப்பில் ஓவியப் போட்டி ஒன்றைக் கடந்த வருடம் நடத்தியிருந்தது.

இதற்காக இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களிடமிருந்து 1925 ஓவியங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற ஓவியங்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் 27 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்படவுள்ளன. (4-6-33)

## காணிகள் அற்ற மக்களுக்கு

# காணி வழங்கக்கோரி மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணியற்று வாழும் தமக்கு காணி வழங்க வேண்டும் எனக் கோரி வடமாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட செயலர் ஆகியோரிடம் காணி அற்றோர் மக்கள் இயக்கம் மகஜர் கையளித்துள்ளது.

நீண்ட காலமாக தாம் வாடகை வீடுகளில் வசித்து வருவதனால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளமையால், பெருந்தொகை வாடகையை செலுத்த முடியாது தவித்து வருவதாகவும் அதனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை காணியற்ற தமக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று வெள்ளிக் கிழமை கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள், அங்கிருந்து பேரணியாக வடமாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு சென்று செயலாளரிடம் மகஜரை கையளித்தனர். அதனை தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலரிடம் மகஜர் கையளித்தனர்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழை போன்ற இடங்களில் அரச காணிகள் பெருமளவு இல்லை. அந்த இடங்கள் எல்லாம் தனியார் காணிகள். அதேவேளை அவர்களுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய காணிகளின் அளவும் மிகவும் குறைவாகவே இருக்கும். அதேவேளை யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அரச காணிக காணப்படுமாயின் அது சமபந்தமாக ஆராயவுள்ளோமென அவர் மேலும் தெரிவித்தார். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களை அச்சிடுவதற்கு 1600 கோடி ரூபாய் செலவு

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

நடப்பு ஆண்டில் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு 1600 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த செலவு கடந்த வருடங்களில் 450 கோடி ரூபாவாக இருந்ததாகவும் தற்போது அச்சிடும் செலவு நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாண மற்றும் வலய பாடசாலைகளுக்கான பாடசாலை சீருடைத் துணிவிநியோகத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடப்புத்தகங்களுக்கான அச்சில்முழுமையாக நிறைவடைந்த பின்னர், நாடு முழுவதும் உள்ள 48 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மார்ச் 27 ஆம் திகதிக்குள் விநியோகித்து முடிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாடப்புத்தகத் தேவையில் 45 சதவீத அரசாங்க அச்சக திணைக்களம் இந்தியக் கடன் உதவியுடன் மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து, மீதமுள்ள 55 சதவீதத்தின் அச்சிடலுக்காக 22 தனியார் அச்சகங்கள் பங்களிப்பு செய்துள்ளன என அவர் குறிப்பிட்டார். (நி)

# யாழில் மேலும் இரண்டு பாடசாலைகளுக்கு பேருந்து

## உறுதிமொழி வழங்கினார் சஜித்

(அராலி)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இரண்டு நாட்கள் விஜயம்மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நிலையில் யாழில் நடைபெறுகின்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அந்தவகையில் ஊர்காவற்றுறை மற்றும் வட்டுக்கோட்டை தொகுதியின் அமைப்பாளர் முருகவேல் சதாசிவத்தின் ஏற்பாட்டில், மூளாய் வதிரன்புலோ பிரசாத் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரச்சார கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

இதன்போது வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் தமது பாடசாலைகளுக்கு பேருந்து தேவை என கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்தனர். இது குறித்து ஆராய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் குறித்த இரண்டு பாடசாலைகளுக்கும் பேருந்துகளை வழங்குவதாக உறுதியளித்தார். (4-6-104)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று யாழ். பொம்மைவெளி பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டு அறிந்து கொண்டார். (படம்: கஜிந்தன்)

# தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவித்த ரணில்

## மக்கள் விடுதலை முன்னணி சாடல்

(கொழும்பு)

நீதிமன்றம் தேர்தல் தொடர்பான உத்தரவை பிறப்பிக்கும் முன்னரே தேர்தலை நடத்தப் போவதில்லை என அறிவித்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவித்தமைக்காக ஜனாதிபதி எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக இன்று முதல் மக்கள் படையொன்று அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் நீதிமன்றில் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேளையில், தீர்மானத்தை வழங்குவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி தெரிவித்தமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும்.

தேர்தலுக்கு பயந்து தான் ஜனாதிபதி இவ்வாறு கூறுகின்றார் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# கொரோனா பரவலின் பின்னர் இலங்கை வரும் சீனப்பயணிகள்

(கொழும்பு)

உலகளாவிய கொரோனாத் தொற்று நோய் பரவலுக்கு பிறகு, முதலாவது சீன சுற்றுலாப் பயணிகள் குழு, இலங்கை வரவுள்ளது.

கொரோனா தொற்றுக்கு பிறகு சீனாவிலிருந்து சுற்றுலா செல்லக்கூடிய முதல் 20 நாடுகளில் இலங்கையையும் சீனா பெயரிட்டுள்ளதன் பின்னணியில் இந்த வருகை அமையவுள்ளது. குறித்த சுற்றுலாப் பயணிகளுடனான விமானம் மார்ச் 3 ஆம் திகதி ஷாங்காய் புடாங் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்படவுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டில், சீனாவிலிருந்து 280,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எட்டு மாவட்டங்களில் யானைக்கால் நோய் பரவும் அபாயம்-நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் 8 மாவட்டங்களில் யானைக்கால் நோய் பரவும் அபாயம் இருப்பதாக யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நோய் கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, கம்பஹா, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் தொடர்ந்து பரவி வருகின்றது.

கடந்த ஆண்டில் மாத்திரம் 400 புதிய நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் மருத்துவர் உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் இருந்து இந்த நோயை 2030 ஆம் ஆண்டு அளவில் ஒழிப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக, இரத்தப் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வீடுகளுக்கு வரும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (நி)



கம்பர்மலை கலாவாணி முன்பள்ளி சிறார்களின் சந்தை நேற்று சிறப்பாக நடைபெற்றது. இதில் கிராமத்து பெரியோர்கள் பலர் கலந்து கொண்டு பொருட்களை வாங்கி பாலர்களை மகிழ்வித்தனர். (படம்: மகாலிங்கம்)

# வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைய முயற்சித்த, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேரை நாளை மறுதினம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை நேற்று (வெள்ளிக்கிழமை) நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (நி)

# இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்க இந்தியாவும் இலங்கையும் இணக்கம்

(கொழும்பு)

இந்தியாவும் இலங்கையும் இருதரப்பு இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்திய தலைநகர் புதுடில்லியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 7 ஆவது ஆண்டு இந்திய-இலங்கை பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் இரண்டு நாடுகளும் தங்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்தன.

இதன்போதே, இருதரப்பு பயிற்சிகளை மேம்படுத்த இருதரப்பும் ஒப்புக் கொண்டதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இரு தரப்பு அனுபவம் மற்றும் திறன்களை முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முடிவெடுக்கப்பட்டது. (நி)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனேநம
யாழ்-திருவண்ணை

அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
சுபகிருது வருட (2023) மஹோற்சவம்

கொடியேற்றம் : 26.02.2023 ஞாயிறு காலை 10.00மணி
தேர் : 06.03.2023 திங்கள் காலை 8.00 மணி
தீர்த்தம் : 07.03.2023 செவ்வாய் காலை 8.30 மணி

(14718) தேவஸ்தான ஆதின கர்த்தாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 112







காஞ்சி பழைய பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரம். பல தடவை பகைவர்களின் தாக்குதல்களுக்கு உட்பட்டது.அங்கிருந்த மாளிகைகளும் மண்டபங்களும் மற்ற கட்டடங்களும் பழைமையடைந்து சிதிலமாகிப் பூஞ்சக்காளான் பூத்திருந்தன.

அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கட்டடங்கள்தான். ஆனாலும் பல பகுதிகள் இடிந்தும் சிதைந்தும் கிடந்தன. ஆதித்த கரிகாலர் வந்த பிறகு புதுப்பித்துக் கட்டிய சில மாளிகைகள் மட்டும், பட்ட மரத்தில் ஒவ்வோரிடத்தில் தளிர்த்திருக்கும் மலர்களைப் போல் விளங்கி, நகரத்தின் பாழடைந்த தோற்றத்தை மிகைப்படுத்திக் காட்டின.

இந்தத் தஞ்சையின் தோற்றமோ நேர்மாறாக இருந்தது. எல்லாம் புதிய மாளிகைகள், புதிய மண்டபங்கள். வெண் சுண்ண மாளிகைகளுக்கு மத்தியில் செம்மண்ணில் சுட்ட செங்கற்களினால் கட்டிய சிற்சில கட்டடங்கள் வைரங்களுக்கும் முத்துக்களுக்கும் இடையிலே இரத்தினங்களைப் பதித்தது போல் ஒளி வீசித் திகழ்ந்தன.

ஆங்காங்கு அரண்மனைத் தோட்டங்களில் வளர்ந்திருந்த விருட்சங்கள் செம்மண் பூமியின் சத்தை உண்டு, கொழுகொழுவென்று செழித்து ஓங்கியிருந்தன. புன்னை, தென்னை, அசோகம், அரசு, ஆல், பலா, வேம்பு முதலிய மரங்களில் அடர்ந்து தழைத்திருந்த இலைகள் மரகதப் பச்சையின் பல சாயல்களுடன் கண்ணுக்கு இனிமையையும் மனத்துக்கு உற்சாகத்தையும் அளித்தன.

அதிசய சக்தி வாய்ந்த மந்திரவாதியான மயன் புதிதாக நிர்மாணித்த நகரம் இது. இந்தப் புதிய நகருக்குள் பிரவேசிக்கும் போதே ஒரு புதிய உற்சாகம் பிறந்தது; உள்ளம் பூரித்துப் பொங்கியது காரணம் தெரியாத கர்வம் நிறைந்தது.

கோட்டையின் கட்டுக்காவலையும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள நிர்ப்பந்தங்களையும் கவனித்திருந்த வந்தியத்தேவன், உள்ளே அதிக ஜனநடமாட்டமே இல்லாமல் வெறிச்சென்று இருக்கும் என்று எண்ணியிருந்தான்.

ஆனால் அதற்கு நேர்மாறாக, தெருக்களெல்லாம் 'ஜேஜே' என்று கூட்டமாயிருந்தது. குதிரைகளும் குதிரை பூட்டிய ரதங்களும் பூமி அதிரும்படி சத்தமிட்டுக் கொண்டு சென்றன. கரிய குன்றுகள் அசைந்து வருவது போல் நிதானமாகவும் கம்பீரமாகவும் நடந்து வந்த யானைகளின் மணி ஓசை நாலா புறங்களிலும் கேட்டது. பூ, கறிகாய், பழம், பால், தயிர் விற்போரின் கூச்சல்கள் செவிகளைத் 'தொளைத்தன.

அவ்வப்போது காலத்தை அறிவிக்கும் ஆலாட்சி மணிகளின் ஓசையுடன் பேரிகையின் முழக்கமும் கலந்தது.இசைக்கருவிகள் எழுப்பிய இன்னிசைகளுடன் மங்கையர் பாடிய மதுர கீதங்கள் கலந்தன. எல்லாம் ஒரே திருவிழாக் கோலாகலமாகவே இருந்தது.

நகரம் என்றால் இதுவல்லவா நகரம்! நாளுக்கு நாள் விரிந்து பரந்து வரும் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகரம் இப்படித்தான் இருக்கும் போலும். தான் இத்தகைய நகரத்துக்கு முற்றிலும் புதியவன் என்று காட்டிக் கொள்ள வந்தியத்தேவன் விரும்பவில்லை.

யாரையாவது வழி கேட்டால் தன்னை ஏற இறங்கப் பார்த்து, "நீ இந்த ஊருக்குப் புதியவனா?" என்று அலட்சியமாகப் பேசுவார்கள். அரண்மனைக்கு வழி கேட்கிறவனை வெளியூரிலிருந்து வந்த பட்டிக்காட்டான் என்று கூட நினைத்து விடுவார்கள். ஆகையால், யாரையும் வழி கேட்காமலேயே சக்கரவர்த்தியின் அரண்மனையைக் கண்டுபிடித்துப் போய்விட வேண்டும் அது அப்படியொன்றும் முடியாத காரியமாயிராது.

எந்தப் பக்கம் நோக்கினாலும் மாடமாளிகைகளின் மீது மகர தோரணங்களும் கொடிகளும் தோன்றின. வேகத்துடன் வீசிய மேலக் காற்றுடன் அவை துவந்த யுத்தம் செய்து சடசட படபடவென்று சத்தம் செய்து கொண்டு பறந்தன. புலிக் கொடிகளும் பனைக் கொடிகளுமே அதிகமாகக் காணப்பட்டன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திறமையான குள்ளன்

*(நேற்றைய தொடர்ச்சி..)*

எல்லோரும் விறகு வெட்டும் ஓசை கேட்ட இடத்திற்கு வந்தனர். "ஐயோ! அப்பாவைக் காணோமே! இந்தக் காட்டிலிருந்து எப்படி வீட்டுக்குச் செல்வது? கொடிய விலங்குகள் நம்மைக் கொன்று விடுமே! என்ன செய்வது?" என்று அலறினான் இரண்டாமவன்.



"கவலைப்படாதீர்கள். இன்னும் சிறிது நேரத்தில் நிலவு வெளிச்சம் தெரியும். அதன் பிறகு நான் வழி காட்டுகிறேன். நாம் அனைவரும் வீட்டை அடையலாம்" என்று ஆறுதல் சொன்னான் குள்ளன்.

நிலவு வெளிச்சம் பட்டப் பகல் போலக் காய்ந்தது. வழி எங்கும் போட்டு வந்த கூழாங்கல்லை அடையாளமாகக் கொண்டு நடந்தான் குள்ளன். எல்லோரும் பின்தொடர்ந்தார்கள்.

"வீட்டில் தன் மனைவியிடம், நம் குழந்தைகள் காட்டில் எப்படித் தவிப்பார்களோ?" என்றான் அவன்.

"எனக்கு மட்டும் வருத்தம் இல்லையா? நம் கண் எதிரில் ஏன் அவர்கள் துன்பப்பட வேண்டும்? அதனால் தான் அவர்களைக் காட்டில் விட்டுவிட்டு வரச் சொன்னேன். அவர்கள் எங்காவது நலமாக இருக்கட்டும் நான் உணவு சமைக்கிறேன். இருவரும் சாப்பிடலாம்" என்றாள் அவள்.

நள்ளிரவு நேரம், இருவரும் சாப்பிட அமர்ந்தனர்.

கதவு தட்டும் ஓசை கேட்டது. "இந்த நேரத்தில் யார்? கதவைத் திற" என்றான் அவன். கதவைத் திறந்தாள் அவள். தன் மகன்களைக் கண்ட அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சமைத்து வைத்திருந்த உணவை அவர்களுக்குப் பரிமாறினாள்.

சாப்பாடு முடிந்தது. நடந்து வந்த களைப்பால் அவர்கள் தூங்கத் தொடங்கினார்கள்.

விறகுவெட்டிக்கும் அவன் மனைவிக்கும் சாப்பிட உணவில்லை.

"நம் மகன்கள் வந்து விட்டார்களே. இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான் அவன்.

"நிலவு வெளிச்சத்தில் வழி கண்டுபிடித்து வந்து விட்டார்கள். அமாவாசையன்று மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லுங்கள். இன்னும் அதிக தூரம் சென்று விட்டு விட்டு வாருங்கள். அவர்களால் திரும்ப முடியாது" என்றாள் அவள்.

அமாவாசை வந்தது. விடிகாலையில் தன் மகன்களை எழுப்பினாள் அவள். காட்டிற்கு விறகு வெட்டச் செல்லும் அப்பாவுடன் நீங்களும் செல்லுங்கள். மதிய உணவிற்காக ஆளுக்கு இரண்டு அடை சுட்டு வைத்து இருக்கிறேன் என்றாள் அவள்.

குள்ளனுக்கு என்ன நடக்கப் போகிறது என்பது புரிந்தது. கூழாங்கல்லைப் பொறுக்கி வர நேரமில்லை. என்ன செய்வது" என்று குழம்பினான் அவன்.

"நேரமாகி விட்டது. புறப்படுங்கள்" என்று அவசரப்படுத்தினான் விறகு வெட்டி.

அவர்களுடன் கடைசியாகச் சென்றான் குள்ளன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளிபோன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது. ~ *மில்டன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனநாயகத்தின் இருப்பு என்பது தேர்தல் சுவாசத்தில் தங்கியுள்ளது

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அதேநேரம் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை அரசாங்கம் விடுவிக்காததால், ஏலவே திட்டமிட்டவாறு தேர்தலை நடத்த முடியவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தல் இப்போதைக்குச் சாத்தியமில்லை என்று ஊகிக்கலாம்.

இவை ஒருபுறமிருக்க, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதானது, ஒட்டுமொத்த நாட்டுமக்களையும் ஏமாற்றும் செயலாகும்.

ஆம், நிதியில்லை எனும்போது எதற்காக உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை அறிவிக்க வேண்டும் என்ற கேள்வி எழும்.

அதாவது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அறிவிக்கின்றபோது, நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்தது.

இருந்தும் தேர்தலை நடத்துவது பற்றிய அறிவித்தலை தேர்தல் திணைக்களம் விடுத்திருந்தது.

கூடவே வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, வாக்களிப்பு நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பது மற்றும் தபால் மூல வாக்களிப்பு என்பவற்றுக்கான அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது நிதியின்மையால், தேர்தலை நடத்த முடியவில்லை எனக் கூறுவது எந்தவகையிலும் ஏற்புடையதன்று.

உண்மை. தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கின்றபோது, அதற்கான நிதி ஒதுக்கீடு, அந்த நிதியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மூலங்கள் என்பன பற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்த பின்னரே தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்க வேண்டும்.

மாறாக, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்பையும் வேட்புமனுக்களையும் தேர்தல் இடம்பெறும் திகதியையும் அறிவித்துவிட்டு, பின்னர் தேர்தல் நடத்தப் போதிய நிதியில்லை எனக் கூறுவதானது, ஜனநாயகத்தைச் சிதைக்கின்ற கொடுஞ்செயலாகும்.

அதாவது ஒரு நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், உரிய தேர்தல்களை உரிய காலங்களில் நடத்துவதுதான் ஒரே வழி.

தேர்தல்கள் உரிய காலங்களில் நடத்தப்படவில்லையாயின், அல்லது தேர்தல் நடத்தப்படும் என அறிவித்துவிட்டு காலம் கடத்தப்படுமாயின்,

அது ஜனநாயகத்தின் மீதான நம்பகத்தன்மையை இழக்கச் செய்வதுடன் தேர்தல் மீதான கரிசனை, அதன் மீதான ஆர்வம் என்பன சிதைந்து தேர்தல் பற்றிய எண்ணப்பாடு எதிர்மாறாக மக்கள் மனங்களில் பதிவாகிவிடும்.

எனவே தேர்தல் என்பது எப்பாடுபட்டும் உரியகாலத்தில் நடத்தப்பட வேண்டும்.

இல்லையேல் ஜனநாயகம் மெல்லச் சாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## யாழ். மாநகர வர்த்தகர்களிடம் கப்பம் கோருவது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களிடம் கப்பம் கோரல் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் சம்பவங்கள் தொடர்பாக எந்தவிதத் தயக்கமும் இன்றி முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். என யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர பசார் வீதி வர்த்தகர்களுடன் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் உள்ள பசார் வீதியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பசார் வீதியில் ஒரு வழிப் பாதை காரணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடம் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட்டது. வீதியில் இருமருங்கும் ஒவ்வொரு தினமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட வசதியில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

வாகனங்கள் தரிக்க விடப்படும்போது வர்த்தக நிலையங்களுக்கு மக்கள் செல்லக்கூடியவாறு வர்த்தக நிலையங்கள் முன்பாக இடைவெளி விட்டு வாகனங்களைத் தரிக்க வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று வர்த்தகர்களால் கோரப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட பொலிஸார், இது தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்து நட வடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து யாசகம் பெற வருவோரும், சாம்பிராணி விற்க வருவோரும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்கின்றமை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7,33)

## இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 358 ரூபா 72 சதம் விற்பனை பெறுமதி 368 ரூபா 77 சதம்.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 429 ரூபா 97 சதம். விற்பனை பெறுமதி 445 ரூபா 18 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 378 ரூபா 34 சதம். விற்பனை பெறுமதி 393 ரூபா 16 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 381 ரூபா 12 சதம். விற்பனை பெறுமதி 398 ரூபா 12 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 263 ரூபா 19 சதம் விற்பனை பெறுமதி 274 ரூபா 39 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 242 ரூபா 92 சதம் விற்பனை பெறுமதி 253 ரூபா 65 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 64 சதம். விற்பனை பெறுமதி 2 ரூபா 75 சதம்.

இந்திய ரூபாவின் பெறுமதி இலங்கை ரூபாவில் 4 ரூபா 38 சதம்.

பஹ்ரேன் தினார் 961 ரூபா 92 சதம், ஜோர்தான் தினார் 511 ரூபா 26 சதம், குவைட் தினார் 1181 ரூபா 86 சதம், கட்டார் ரியால் 99 ரூபா 36 சதம், சவுதி அரேபிய ரியால் 96 ரூபா 65 சதம், ஐக்கிய அரபு இராச்சியம் திர்ஹாம் 98 ரூபா 73 சதம் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ம-7)

## உணவுப் பாதுகாப்பின்மை இலங்கையில் தொடர்கின்றது

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், உணவுப் பாதுகாப்பின்மை தொடர்ந்தும் கருசனை நிலையில் உள்ளது என உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத்திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 2022 ஆம் ஆண்டு டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட வீட்டு உணவுப் பாதுகாப்பு ஆய்வின்படி 33 சதவீத குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தன.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் படி, கொழும்பின் நகர்ப்புறங்களில் கடந்த ஜனவரியில் உணவுப் பணவீக்கம் 60.1 சதவீதமாக இருந்ததாக உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில் பொது உணவு விநியோகம், பாடசாலை உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு மூலம் 3.4 மில்லியன் மக்களுக்கு உதவ தாம் திட்டமிட்டுள்ளதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. (ம-7)

## சிறந்த பல்கலையாக பேராதனை தெரிவு

உலகில் சிறந்த பல்கலைக்கழகங்கள் தொடர்பான தரவரிசையில் 901 ஆவது இடத்தை பேராதனை பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்டுள்ளதாக அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமவன்ச தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகப் பல்கலைக்கழகங்கள் அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் பதின்மூன்று சிறந்த குறிகாட்டிகள் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், சுமார் இரண்டாயிரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் முப்பதாயிரம் உயர்கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்தி இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இவ்வாறான தரவரிசையைப் பெற்றுள்ள ஒரேயொரு பல்கலைக்கழகம் பேராதனை பல்கலைக்கழகம் எனவும் இதற்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்- மின்சார சபை,ஆளுநர் விடுதி, யாழ்.மாவட்ட செயலகம் துளசி மஹால், [illegible] [illegible] நல்லூர் வீதி சந்தி, முலவை, பேருந்து நிலைய பகுதி விளான், அரசடி சந்தி, சங்கானை, சங்கானை வைத்திய சாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி, வல்லை வீதி-சங்கானை, மணகும்பான் நீர்ப்பாசன சபை, அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, வெண்புரவிநகர் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கணேசபுரம், முத்து [illegible] ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியகரைசல் பாலிமெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிடி, தலைமன்னார் வைத்திய சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, இளைஞர் படை பயிற்சி மையம், பேசாலை - ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி, ஜோசப் வாஸ் நகர், கட்டுகாரங் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, ப்ரவிலுட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீட்மைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து தரப்புடனும் கலந்துரையாடி காற்றாலை திட்டத்தை முன்னெடுங்கள்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு

(தருமபுரம்)

**முறையான பின்பற்றலுடன் அனைத்துத் தரப்புடனும் கலந்துரையாடி காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் செயலாளர் எஸ்.ஜீவநாயகம் தெரிவித்துள்ளார்.**

பூநகரி மற்றும் மன்னார் பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கை முதலீட்டு சபையினால் இந்தியாவின் அதானி தனியார் நிறுவனத்திற்கு இலங்கையின் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்கள் இரண்டை அமைப்பதற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

குறிப்பாக 442 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான திட்டத்திற்கு இரு தரப்பினரும் ஒப்பந்தமிட்டுள்ளனர்.

இதில் முக்கியமான பேசு பொருள் என்னவெனில், நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. அதனைவிட அந்தந்த மாவட்டங்களில் அந்தந்த பிரதேச மக்களுடன் இந்த செயற்றிட்டம் தொடர்பாக வெளிப்படையான உரையாடல்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக இதனால் ஏற்படப்போகின்ற நீண்டகால சுற்றுச்சூழல் சார்ந்த பாதிப்புக்கள் மற்றும் விளைவுகள் சார்ந்த ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த விடயம் தொடர்பில் அப்பிரதேசத்தின் அதிகாரப் பரப்பில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுடன் பேசப்படவில்லை.

இந்த அரசாங்கம் இரவோடிரவாக இந்த ஒப்பந்தத்தை செய்து, வெளிநாட்டு முதலீடுகளையும் நிதிகளையும் உள்ளெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டிருக்கின்றது. நீண்டகாலத்தில் ஏற்படக்கூடிய அபிவிருத்தி விளைவுகள், நிலையான அபிவிருத்திக்கு இத்திட்டங்கள் எவ்வாறு கைகொடுக்கும் என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை.

எனவே இந்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதிலே வெளிப்படைத்தன்மை வேண்டும். அது எமது பாமர மக்களுடனும் நிர்வாக மையங்களுடனும் கலந்துரையாடப்பட வேண்டும் என தெரிவித்தனர். (4-6-316)

# இம்முறை சிறுபோகம்

## அக்கராயனில் 1400 ஏக்கரில் வன்னேரிக்குளம் 246 ஏக்கரில்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் 1,400 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான கூட்டம் கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதேவேளை கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையினை விரைவுபடுத்துமாறு கிளி நொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

வன்னேரிக்குளம் புனரமைப்பு வேலைகள் நடைபெற உள்ளதால் சிறுபோக நெற் செய்கையினை குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப் பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கூட்டத் தீர்மானத்தின் படி 246 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத் தர்களினால் விவசாயிகளின் பயிர்ச் செய்கைக்கு கடன் வசதி ஏற்படுத்தி தருவதாகவும் பயன் பெற்றுக் கொள்ளக் கூடிய விவ சாயிகள் தமது வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்திருந்தனர். (4-6-350)

# நடமாடும் மருத்துவ சேவையை கௌதாரிமுனையில் நடத்துங்கள்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனைக் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவ சேவை ஒன்று நடத்தப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


கௌதாரிமுனையில் 130 குடும்பங்கள் தற்போது வாழ்கின்றன. கௌதாரிமுனையில் இருந்து 15 கிலோமீற்றர் தூரத்தில் பூநகரி பிரதேச மருத்துவமனை உள்ளது. கௌதாரி முனைக்கான ஒரேயொரு பேருந்து சேவை மட்டும் உள்ளது. மாலையில் வருகை தரும் பேருந்து காலையில் கிளிநொச்சியை நோக்கிபயணிக்கின்றது.

இடைப்பட்ட நேரத்தில் எவ்வித போக்குவரத்து வசதியும் கௌதாரிமுனைக் கிராமத்தில் இல்லை.

இந்நிலையில் சிறு வர்கள், மகப்பேற்றிற்குரிய பெண்கள், முதியவர்களின் நலன் கருதி நடமாடும் மருத்துவ சேவை ஒன்று குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு தடவையாவது இடம்பெற வேண்டும் என அக்கிராம மக் கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

இடை நேரத்திலும் போக்குவரத்து வசதிகள் இக்கிராமத்தில் இடம்பெற வேண்டும். நடமாடும் மருத்துவ சேவைக்கான ஒழுங்கினை கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# 4 கிலோ கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது



(முறிகண்டி)

4kg 100g கஞ்சாவுடன் 32 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து புளியங்குளம் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தரினரால் நேற்றுமுன் தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-100-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 280 | 400 |
| தக்காளி | 120 | 130 | 150 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 180 | 240 |
| கோவா | 80 | 70 | 100 | 100 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 220 | 150 | 200 |
| வாழைக்காய் | 130 | 180 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 320 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 600 |
| வெண்டைக்காய் | 350 | 350 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 80 | 120 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 260 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 240 |
| கறிமிளகாய் | 600 | 400 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 300 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 200 | 330 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 90 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 130 | 140 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 80 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 120 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி அமைச்சுக்கு...

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எதிராக, எதிர்வரும் தினங்களில் வழக்கு தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அரச அதிகாரிகள் தேர்தலை நடத்துவதில் தடையாக செயற்படுகின்றமை தொடர்பிலும் நடவடிக்கை எடுப்போம் எனவும் மக்களின் வாக்குரிமையை பாதுகாத்து இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் மேலும் கூறினார். (ம-7)

## வடக்கு மக்களின்...

வாக்க ஒரு கட்சியாகவும் அரசியல் இயக்கமாகவும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பொதுமக்களின் வாழ்க்கையைப் பலப்படுத்துவதற்குத் தேவையான சகல பலத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தென்னிலங்கை மக்களின் அடிப்படை குறைபாடுகள் போலவே வடக்கு மக்களின் அடிப்படைக் குறைபாடு

களும் நிவர்த்தி செய்யப்பட்டு நாட்டின் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படும் சகாப்தம் உருவாக்கப்படும்.

நாட்டின் குடிமக்கள் அரசாங்கத்தின் அடிமைகளாக அல்லாமல் சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், சுதந்திரமான நாட்டில் திருப்தியாக வாழும் குடிமக்களை உருவாக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் ஏனைய நாடுகள் புதிய தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்லும்போது, சமீபகாலமாக இனவாதத்தாலும் மதவாதத்தாலும் எமது நாடு பின்னோக்கி வருகின்றபோதும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அந்த இனவாத, மதவாத சிந்தனைகள் அனைத்தும் கைவிடப்பட்டு, நாட்டின் முன்னோக்கிய பயணத்திற்கு சகலரின் பங்கேற்பை பெற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ் ராணி...

இதில் இராமலிங்கம் இராஜேஸ்வரன் (வயது - 74) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கனடா தம்பதிகள்...

நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கனடாவில், இருந்து இரண்டு மாதங்களிற்கு முன்னர் அனலைதீவிற்கு வந்து வீடு புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த குடும்பத்தவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குள் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் கதவை உடைத்து உட்புகுந்த நால்வர் அடங்கிய கும்பலே இவ்வாறு வாள்வெட்டு தாக்குதலையும் மேற்கொண்டு 3 ஆயிரம் டொலர் மற்றும் கடவுச்சீட்டு உட்பட்ட பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்தவர்கள் அதிகாலை படகுமூலம் ஊர்காவற்றுறை கொண்டுவந்து அதிகாலை 2 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## மார்ச் 9இல்...

தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தப்படும் திகதி தொடர்பில் மார்ச் மாதம் 03ஆம் திகதி அறிவிக்கப்படுமெனவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அரசியலமைப்பு ரீதியாக தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையுடன் திறைசேரியிடமிருந்து தேவையான நிதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் சபா நாயகரிடம் அறிக்கையிடவுள்ளதாக ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது. (ம-7)

## 13வது திருத்தம்...

வேண்டியது அவசியமானதாகும்.

மக்களின் தேவைகளைத் தீர்மானிக்கும் ஒரே வழி, தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவது எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் கடமையாகும் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தற்போது அவசியமானது என நடப்பு அரசாங்கம் கருதினாலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அதனை முற்றாக மறுப்பதாகக் கூறியுள்ளார்.

“அது தேவையில்லை என்று நாங்கள் நினைக்கிறோம்,” எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கைக்கு...

அதுல சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஹிமாச்சல் உத்தரகாண்ட் பகுதிகளில் 8 ரிக்டர் அள்வில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக இந்திய நிலநடுக்கவியல் ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் 8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்ஏற்பட்டால்அது கொழும்பை நிச்சயம் பாதிக்கும் என புவியியல் துறையின் மூத்த பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## வடக்கின் விவ...

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்கின் விவசாயத்துறை பாதிப்புக்கு தற்போதுள்ள நாட்டின் தலைவரோ இதற்கு முன்பு இருந்த தலைவரோ பொறுப்பல்ல.

விடுதலைப் புலிகளே வடக்கின் விவசாயத் துறையை அழித்தனரென்றும் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கம் ஒருபோதும் இனவாதத்துடன் செயற்படுவதில்லையென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ள தொழிற்சாலைகளின் உபகரணங்களையும் கொண்டு சென்றவர்கள் புலிகளே. இதையும் தமிழ் அரசியல்வாதிகள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## தேர்...

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் முன்வைத்த கருத்துக்களுக்கு சமூக வலைத்தளம் ஊடாக அவர் மேற்கண்டவாறு பதில் வழங்கியுள்ளார்.

அனைத்து அரச அதிகாரிகளும் தேவையற்ற மற்றும் நெறிமுறையற்ற அழுத்தங்களுக்கு உட்பட்டு சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுவதற்கு இடம்கொடுக்காமல், திட்டமிட்ட திகதியில் அரசியலமைப்பு ரீதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான செயற்பாடுகளை செய்யுமாறு நினைவூட்டுகிறோம்.

இலங்கை மக்கள் எந்தவொரு தடையுமின்றி தமது உரிமையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பதற்கு சர்வதேச சமூகமும் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்கிறோம்.

இதன்மூலம், இலங்கையர்களின் சுதந்திரமும் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

இலங்கையின் குடிமக்களும் வாக்குரிமைக்கான ஜனநாயக மற்றும் இறையாண்மை உரிமை குறித்து விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அடிப்படை உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எந்தவொரு முயற்சிக்கும் நாம் இடம்கொடுக்கக்கூடாது. என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1496
வெற்றி இலக்கங்கள்: கடகம் 1 8 2 4 1 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1071
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 12 24 66 69

கொவிசெத
திகதி 2023.02.24
சீட்டிழுப்பு இலக்கம் 3283
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 11 17 20 43
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1389
C 14
வெற்றி இலக்கங்கள் 03 14 44 63

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.24
சீட்டிழுப்பு இலக்கம் 350
வெற்றி இலக்கங்கள் ரிஷபம் 13 16 19 27 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/24
சீட்டிழுப்பு இலக்கம் 5041
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 3 9 2 2 5 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2016
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.02.24
தினம் வெள்ளிக்கிழமை
P 15 47 55 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,840,800/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.24
சீட்டிழுப்பு இல : 4177
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,770,840/-
வெற்றி இலக்கங்கள் 20 27 30 75
ஆங்கில எழுத்து Q
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 292
சீட்டிழுப்பு திகதி 2023.02.24
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 04 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,917,840/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,009,668/-
திகதி 2023-02-24
வெற்றி வாரம் 3728
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 02 15 43 59
மகரம்
5854
666
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 11,074,220/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 11 27 55 63 64
சீட்டிழுப்பு வாரம் 1192
2023.02.24
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 308,597,432.20
தொலைபேசி 011-2 333 546-47
DLB

அத கோடிபதி
ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1842
சீட்டிழுப்பு திகதி : 2023 02 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,610,960/-
வெற்றி இலக்கங்கள் 25 31 61 71
ஆங்கில எழுத்து O
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில்

2ஆவது வாரமாக

Dr.சிவன்சுதனின்

**தீவாளம்**

முழுநீளத் திரைப்படம்

தினசரி காட்சிகள்

கிழமை நாட்களில் மாலை 5.30 மணி

சனி,ஞாயிறு மாலை 4.30 மணி

இது எமது சொந்த மண்ணின் கதை

மாணவர்களுக்கு விசேட சலுகை — தொடர்புகளுக்கு 0778256757 (E)

## IELTS வகுப்புகள்

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- எம்மிடம் பயின்று 6 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளாவிடின் 100% பணம் மீளளிக்கப்படும்.

**071 071 6979**

Winstar Consultants Pvt Ltd (14704)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில்
- நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்

**076 465 0171, 076 911 9371**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 54 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி
- நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

**076 435 0614, 077 638 5683** (14721)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் போட்டோ கொப்பிக் கடைக்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற வேலையாட்கள் தேவை. வயதெல்லை - (20-40)

**T.P : 076 832 3682** (14717)

யாழ் நகருக்கு அண்மையுள்ளோர் விரும்பத்தக்கது.

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

**076 485 4390**

**076 436 5814** (14720)

# பௌசி விடுதலை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு, சுமார் 10 இலட்சம் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியை, கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சுக்கு, நெதர்லாந்தினால் வழங்கப்பட்ட மகிழுந்து ஒன்றை, தமது தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தி, அரசாங்கத்துக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியை, 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், 100,000 ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. . (ம-7)

## NORTH LANKA IIT CITY CAMPUS

**APPROVED BY UGC AND UNESCO**

U.G.C அங்கீகாரம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம்

இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரம், IAU வின் அங்கீகாரம், UNESCO அங்கீகாரம், 9. WHED யின் அங்கீகாரம்

**பின்வரும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**Bachelor of Education - TOPUP 1 YEAR**
தகைமை : Diploma in Training College/ College Education
காலம் : 1 Year

**Master of commerce with Computer Application**
தகைமை : Bachelor of Commerce
காலம் : 1 Year

**Bachelor of Education 3 YEAR**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Bachelor of Business Administration**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Master of Education**
தகைமை : Bachelor of Education
காலம் : 1 Year

**Master of Business Administration**
தகைமை : Any Degree
காலம் : 1 Year

**Bachelor of Commerce with Computer Application**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Post Graduate Diploma in Public Administration**
தகைமை : Any Degree
காலம் : 1 Year

Matale Lanka City Campus.
Mr.C.Jeevarafnam
main street, matale,
T.P:071 347 6838, 070 319 9333

North Lanka IIT Top Floor,
People's Bank Building,
Stanley Road, Jaffna.
T.P: 076 750 4535

Lanka City Campus
Vavuniya
Station Road, Vavuniya
T.P : 076 488 6169

Lanka City Campus
Mannar, Kilinochchi,
Batticaloa and Trincomalee
Dr.Rev.Fr.S.Jeyarajan Coonghe
T.P: 070 229 1281

(C-6047)

## CHOLA FOODS & CIMS COLLEGE

CHOLA FOODS — CHOLA INTERNATIONAL (P) LTD | CIMS — COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

SCHOLARSHIPS — முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்

வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு



- FOOD & BEVERAGE
- COOKERY
- HOUSE KEEPING
- FRONT OFFICE
- DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)

- ✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
- ✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
- ✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- ✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
- ✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←

நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது

**0777-068-777** (C-6052)

## சுய தொழில்வாய்ப்பு • நிறைந்த வருமானம்

V2 TRAVELS, CHOLA FOODS (CHOLA INTERNATIONAL (P) LTD) உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**V2 TRAVELS 0777-068-777** (C-6051)

## English Classes

**Gr - 1 to O/L**

Grammar With Spoken வீடுவந்து கற்பிக்கப்படும்

**Tp-077 331 4608**

யாழ்ப்பாணம் (14705)

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6051)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**

பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com

## வேலையாள் தேவை

ஈர அரிசி அரைத்து மா வறுத்தல் ஆண், பெண் இருபாலரும்.

T.P :

**077 936 1356**

சம்பளம் :- 1800/= மேல் (C-6048)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Accounts Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு :-

**077 367 1062** (14688)

## Pearl Island Inn Hotel & Restaurant

உயர்தரம் வாய்ந்த தங்ககங்கள் (Rooms) வசதிகளுடன் யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் பாரம்பரிய உணவுகள் மற்றும் குளிர்பானங்களை சுவைத்திட எம்மோடு இணைந்திடுவீர்.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்




(C-6046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.